அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–32.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திரு.த. இளம்பூரணன், பி.இ.

*****

செ.மு.ஆ. எண். 4456/இ2/2019 நாள் : 21.01.2020

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர் தொகுதி – இளநிலை உதவியாளர் – பணி வரன்முறைப்படுத்துதல் – ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய க.எண். 1020/PSD–G2/2019, நாள் 30.3.2019.
2. அரசு தலைமை மின் ஆய்வாளர் செ.மு.ஆ.எண். 4456இ2/2019, நாள் 28.6.2019.

******

ஆணை:

பார்வை (1)–ல் கண்ட கடிதத்தின்படி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. செ.ப. கார்த்திக், பார்வை (2)–ல் குறிப்பிட்டுள்ள செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமிக்கப்பட்டு அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்தில் 11.11.2019 பி.ப. பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

இவரது பணி இவர் பணியில் சேர்ந்த நாளான 11.11.2019 பி.ப. முதல் வரன்முறை படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

இளநிலை உதவியாளர் பதவியில் இவர் மூன்றாண்டு தொடர்பணிக் காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் இருப்பார் எனவும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

மேலும், இந்த பணிவரன் முறையானது 2015–16, 2016–17 மற்றும் 2017–18–ஆம் ஆண்டிற்கான தொகுதி IV பணி நியமனம் குறித்து உயர்நீதி மன்றம் / சென்னை மற்றும் மதுரை கிளையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(ஒம்.) (த. இளம்பூரணன்)
அரசு தலைமை மின் ஆய்வாளர்.

/உண்மை நகல் அனுப்பப்படுகிறது/

(ஒம்.)
தலைமைக் கணக்கர்.

பெறுநர்: திரு. செ.ப. கார்த்திக், இளநிலை உதவியாளர்.
நகல் இருப்புக் கோப்பு.
கு.இரா./21.01.2020/

/உண்மை நகல்/

ஆட்சி அலுவலர்,
அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்,
கிண்டி, சென்னை - 600 032.